# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-10 - இன்பம் பயக்க
## (இன்பக்கவி பாடுவித்த ஸ்ரீமந்நாராயணனை ஆழ்வார் திருவாறன்விளையில் சென்று கண்டு அடிமை செய்யக் கருதல்)

3436 * இன்பம் பயக்க எழில் மலர்
மாதரும் தானும் * இவ்வேழுலகை *
இன்பம் பயக்க இனிதுடன்
வீற்றிருந்து * ஆள்கின்ற எங்கள் பிரான் **
அன்புற்று அமர்ந்து உறைகின்ற *
அணிபொழில் சூழ் திருவாறன்விளை *
அன்புற்று அமர்ந்து வலஞ்செய்து *
கைதொழும் நாள்களும் ஆகுங்கொலோ? 1

3437 ஆகுங்கொல்? ஐயம் ஒன்றின்றி *
அகலிடம் முற்றவும் ஈரடியே *
ஆகும் பரிசு நிமிர்ந்த *
திருக்குறளப்பன் அமர்ந்துறையும் **
மாகம் திகழ் கொடி மாடங்கள் நீடு *
மதிள் திருவாறன்விளை *
மாகந்த நீர் கொண்டு தூவி வலம்
செய்து * கைதொழக் கூடுங்கொலோ? 2

3438 கூடுங்கொல்? வைகலும் * கோவிந்தனை
மதுசூதனைக் கோளரியை *
ஆடும் பறவை மிசைக் கண்டு *
கைதொழுதன்றி அவன் உறையும் **
பாடும் பெரும் புகழ் நான்மறை
வேள்வி ஐந்து * ஆறங்கம் பன்னினர் வாழ் *
நீடு பொழில் திருவாறன்விளை
தொழ * வாய்க்குங்கொல்? நிச்சலுமே 3

3439 வாய்க்குங்கொல்? நிச்சலும் * எப்பொழுதும்
மனத்து ஈங்கு நினைக்கப் பெற *
வாய்க்கும் கரும்பும் பெருஞ்செந்நெலும் *
வயல் சூழ் திருவாறன்விளை **
வாய்க்கும் பெரும் புகழ் மூவுலகீசன் *
வடமதுரைப் பிறந்த *
வாய்க்கும் மணி நிறக் கண்ண பிரான்
தன் * மலரடிப் போதுகளே 4

3440 மலரடிப் போதுகள் என்னெஞ்சத்து

எப்பொழுதும் * இருத்தி வணங்க *
பலரடியார் முன்பருளிய *
பாம்பணையப்பன் அமர்ந்துறையும் **
மலரின் மணி நெடுமாடங்கள்
நீடு * மதில் திருவாறன்விளை *
உலக மலி புகழ் பாட * நம் மேல்
வினை ஒன்றும் நில்லா கெடுமே 5

3441 ஒன்றும் நில்லா கெடும் முற்றவும்
தீவினை * உள்ளித் தொழுமின் தொண்டீர்! *
அன்றங்கு அமர் வென்று உருப்பிணி
நங்கை * அணி நெடுந்தோள் புணர்ந்தான் **
என்றும் எப்போதும் என் நெஞ்சம்
துதிப்ப * உள்ளே இருக்கின்ற பிரான் *
நின்ற அணி திருவாறன்விளை
என்னும் * நீள்நகரமதுவே 6

3442 நீணகரமதுவே மலர்ச்
சோலைகள் சூழ் * திருவாறன்விளை *
நீணகரத்துறைகின்ற பிரான் *
நெடுமால் கண்ணன் விண்ணவர்கோன் **
வாணபுரம் புக்கு முக்கட்பிரானைத் *
தொலைய வெம்போர்கள் செய்து *
வாணனை ஆயிரந்தோள் துணித்தான் *
சரணன்றி மற்றொன்றிலமே 7

3443 அன்றி மற்றொன்றிலம் நின் சரணே
என்று * அகலிரும் பொய்கையின்வாய் *
நின்று தன் நீள்கழல் ஏத்திய *
ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த பிரான் **
சென்றங்கு இனிது உறைகின்ற *
செழும்பொழில் சூழ் திருவாறன்விளை *
ஒன்றி வலஞ்செய்ய ஒன்றுமோ? *
தீவினை உள்ளத்தின் சார்வல்லவே 8

3444 தீவினை உள்ளத்தின் சார்வல்லவாகித் *
தெளிவீசும்பு ஏறலுற்றால் *
நாவினுள்ளும் உள்ளத்துள்ளும் *
அமைந்த தொழிலினுள்ளும் நவின்று **
யாவரும் வந்து வணங்கும்
பொழில் * திருவாறன்விளை அதனை *
மேவி வலம் செய்து கைதொழக்
கூடுங்கொல்? என்னும் * என் சிந்தனையே 9

3445 சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத்
தன்மை * தேவபிரான் அறியும் *
சிந்தையினால் செய்வதானறியாதன *
மாயங்கள் ஒன்றும் இல்லை **
சிந்தையினால் சொல்லினால் செய்கையால் *
நிலத்தேவர் குழு வணங்கும் *
சிந்தை மகிழ் திருவாறன்விளை
உறை * தீர்த்தனுக்கு அற்ற பின்னே 10

3446 * தீர்த்தனுக்கு அற்ற பின் * மற்றோர்
சரண் இல்லை என்று எண்ணி * தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனனாகிச் *
செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன **
தீர்த்தங்கள் ஆயிரத்துள் * இவை
பத்தும் வல்லார்களை * தேவர் வைகல்
தீர்த்தங்களே என்று பூசித்து
நல்கி உரைப்பர் * தம் தேவியர்க்கே 11

**அடிவரவு:** இன்பம் ஆகும் கூடும் வாய்க்கும் மலர் ஒன்று நீணகரம்
அன்றி தீவினை சிந்தை தீர்த்தன் தேவி